# ஜாமக்காரன்

# JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1தெச. 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1கொரி. 2:15

**VOLUME - 6 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 12**

**DECEMBER 2022 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333**

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com

ஜா ம க் கா ர ன்

J A M A K K A R A N



கர்த்தருக்குள் அன்பானவர்களே

கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

கிறிஸ்துவின் வருகை மிக சமீபமாக இருக்கிறது. நம் சபைகள் இன்னும் உயிர்மீட்சி பெறவில்லை.

இந்தியாவில் எங்கு பார்த்தாலும் விக்கிரக ஆராதானையும் என்றைக்கும் கேட்டிராத புதுபுது பழம் சிலைகளை கண்டுபிடித்து பாழடைந்த **இந்து கோவில்கள்** புதுப்பிக்கப்பட்டு **கும்பாபிஷேகமும்,** தேர்கள் அலங்கரிக்கப் பட்டு மக்கள் திரளாக கூடி இழுத்து வருவதை தினசரி TV நிகழ்ச்சிகளில் காண்பது **கர்த்தரின் வெருப்பை** இந்திய மக்கள் அதிகமாக்கிக் கொண்டு இருக்கிறார்கள். இந்தியாவிலேயே மிக உயரமான **அனுமன் சிலை** கட்டப்பட்டுவிட்டது. அனைத்து **மிருகங்களையும், ஊர்வன, பறப்பன** போன்றவைகளையும், **பன்றி** முதல்கொண்டு **முதலைவரை** எல்லா மிருகங்களையும் **தெய்வங்களாக்கி** மக்கள் **வணங்கத் தொடங்கிவிட்டனர்.** மெத்த படித்தவர் முதல் பாமர மக்கள் வரை அப்படிப்பட்ட **மிருகங்களை** சிலைவடிவமாக்கி **கை கூப்பி** வணங்குவதை பார்த்தால் மிக பரிதாபமாக இருக்கிறது. இம்மக்களை எப்படி புரியவைக்கிறது.

இப்படிப்ட்ட சூழ்நிலையில் நம் **கிறிஸ்தவ மக்கள்** குறிப்பாக தமிழ்நாட்டில்

# DECEMBER - 2022

உள்ள கிறிஸ்தவ சபைகள் பொங்கலை தமிழ் கலாச்சாரம் என்று கூறி **இந்து மக்களோடு** சேர்ந்து நாமும் சூரியனை வணங்குவதில் தவறில்லை என்று பிஷப் முதல் – ஆயர்கள் வரை ஆலயத்தில் ***பொங்கல்*** நாளை கொண்டாடுவதை ஊக்குவிக்கிறார்கள். நம் கர்த்தர் **ஆதியாகமத்திலிருந்து – மல்கியா** புத்தகம் வரை **சிலை வணக்கம்** கூடாது, அது எனக்கு **வெறுப்பை** உண்டாக்குவதாகும் என்று இஸ்ரவேல் மக்களை எச்சரித்துக்கொண்டே வந்ததை சபையிலும் வீட்டிலும் **நம் வேத புத்தகத்தில்** வாசித்து அறிந்தும் ஆண்டவர் **அறுவருக்கும்** அதே தவறை மீண்டும் மீண்டும் செய்வதால் எத்தனை காலம் ஆண்டவர் கிறிஸ்தவ சபைகளோடும் சபை பிஷப்புடனும், ஆயர்களோடும் பொருமையோடு இருப்பார்.


தமிழ்நாட்டில் **ஒரு பிஷப்** பொங்கல் நாளில் **சிறப்பு ஆராதனை நடத்தி** அன்று **ஆண்கள்** யாவரும் **வேஷ்டி உடுத்தி** ஆலயத்துக்கு வரவேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார். மக்கள் **வேஷ்டி உடுத்தி** வந்தால் **ஆயர் வேஷ்டி** உடுத்துவாரா ? அல்லது அந்த **பிஷப்தான்** வேஷ்டி **உடுத்தி** அந்த ஒருநாள் **பெந்தேகோஸ்தே பாஸ்டர்கள்** மாதிரி **வேஷ்டி ஜீப்பா** அணிந்து வருவாரா? **தானும்** தேவ கோபத்துக்குள்ளாகி **மக்களையும்** தேவ கோபத்துக்கு உள்ளாக்குகிறார்களே. இவர்களை யாரும் எதிர்த்து கேட்க முடியாதா?

**சூரியன்** அழிந்து போவதாகும். நாம் **ஆராதிக்கும் தேவன்** அந்த **சூரியனையும் அண்ட சராசரங்களையும் உண்டாக்கியவர்** ஆகும். அவர் உயிரோடிருக்க **அழிந்துபோகும் சூரியனை** யோகா மூலமாகவும், பொங்கல் விழா மூலமாகவும் கிறிஸ்தவ ஆலயங்களில் அதன் கொண்டாடங்களை நடத்த ஏற்பாடு செய்து **தானும் கெட்டு கிறிஸ்தவர்களையும் கெடுக்கும் பிஷப்மாருக்கும் ஆயர்களுக்கும்** ஐயோ! இவர்கள் **முடிவு** மிக மோசமாக இருக்கும்.

இதற்கு **சபை கமிட்டி** எதிர்ப்பு தெரிவிக்காமல் இந்த **பெரிய பாவத்துக்கு** துணைபோகிறது.

இயேசுவின் சீஷன் **தோமா** கேரள கடற்கரையில் வந்து இறங்கியபோது **குளத்தில் சூரியநமஸ்காரம்** செய்து கொண்டிருந்த மலையாள **நம்பூதிரிகளை** (பிராமணர்) பார்த்து அழிந்துபோகும் இந்த **சூரியனை** வணங்குவதை நிறுத்தி இந்த **சூரிய சந்திர அண்டசராசரங்களையும்** உண்டாக்கின தெய்வமாகிய **இயேசு கிறிஸ்துவை** வணங்குங்கள் என்று கூறி, அந்த தெய்வமாகிய இயேசுவைத்தான் உங்களுக்கு அறிவிக்க இந்தியா வந்தேன் என்று அவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்து அத்தனை **நம்பூதிரிகளும்** சூரிய நமஸ்காரத்தை வணங்குவதை **நிறுத்தி உயிருள்ள இயேசு கிறிஸ்துவை** குல தெய்வமாக **ஏற்றுக்கொண்டார்கள்.**

அதன் மூலம் **கிறிஸ்தவம்** இந்தியாவில் **பறவியது.** ஆனால் இப்போதைய கிறிஸ்தவ **சபை தலைவர்கள் – ஆயர்கள்** நவீன உபதேசமாக **பொங்கலையும், ஓணம்** பண்டிகையையும், **தீபாவளியையும் கிறிஸ்தவ ஆராதணையில்** நடத்தி மக்களை **பழைய பாவத்துக் கொண்டுபோகிறார்கள்.** இது எத்தனை ஆபத்தான விஷயம். நியாயத்தீர்ப்பில் நீங்கள் பதில் சொல்லவேண்டி வரும். அடுத்த பக்கத்தில் உள்ள புகைப்படத்தை பாருங்கள்



## Former Church of South India Moderator and Madhya Kerala Bishop taking Part in Hindu Pooja ritual

## STOP HIS PENSION IMMEDIATELY

கேராளாவில் உள்ள CSI **மத்திய கேரள** டையோசிஸ்ஸின் முன்னாள் **பிஷப்பும்** அனைத்து CSI டையோசிஸ்ஸின் தலைவராகிய ஓய்வுபெற்ற மாடரேட்டர் பிஷப் உம்மன அவர்கள் **பொங்கல்** வைத்து **விக்கிரக பூஜையில்** அமர்ந்து **கைகூப்பி** பூஜையில் கலந்துகொண்ட கன்றாவி படத்தை பார்க்கீறீர்கள். இந்த படமும் செய்தியும் பத்திரிகைகளிலும் YouTubeகளிலும் தீயென பறவி கேரளாவில் உள்ள **உண்மை கிறிஸ்தவர்கள்** பதைபதைத்து போனார்கள்.

இவர் பதவியில் இருக்கும் போதே இவரின் **நவீன உபதேசம்** சரியில்லை, தவறானது, **மரங்களுக்கு**ம் உயிர் உண்டு, **அவைகளுக்காகவும்** ஜெபிக்க வேண்டும் என்று 24 டையோசிஸ்களுக்கும் **இந்த பிஷப்**தான் அறிக்கை அனுப்பினார்.

உடனே புகைப் படத்தோடு ஜாமக்காரனில் வெளியிட்டு இந்த தவறான உபதேசத்துக்கு துணைபோகும் **ஆயர்** அவருடன் **சபை ஜனங்கள்** அனைவரும் குடும்பமாய் **பிஷப்போடு**

சேர்ந்து **நரகத்துக்கு போவீர்கள்** என்று எச்சரித்தேன். அதனால் மத்திய கேரளாவில் என்னை மிகவும் நேசித்த **மாடரேட்டரும்,** பிஷப்புமான **பிஷப் உம்மன்** அவர்களின் **உறவினர்கள்** அனைவரும் என்னை வெறுத்தார்கள்.

இப்போது அதே பிஷப் உம்மன் & மாடரேட்டர் **விக்கிரக பூஜையில்** பங்கெடுத்து **மத்திய கேரள CSI** சபை மக்களை நரகத்துக்கு தன்னோடு வர இந்த தவறான முன் உதாரணம் மூலமாக அழைப்பு விடுத்துள்ளார். இது மத்திய கேரள டையோசிஸ் CSI சபையினருக்கு பெருத்த அவமானமாகும்.

இந்த புகைப்படம் பத்திரிகையிலும் YouTube லும் வந்ததை பார்த்த கேரள CSI கிறிஸ்தவ மக்கள் துண்டுபிரதி அச்சடித்து சினாட்டுக்கும் அனைத்து CSI சபைகளுக்கும் வினியோகித்துள்ளனர். அந்த துண்டு பிரதியின் தலைப்பு Stop his Pension Immediately என்பதாகும். டையோசிஸ் இவருக்கு **ஓய்வு ஊதியமாக** கொடுக்கும் 1.5 லட்சத்துக்கு அதிகமான **பென்ஷன் தொகையை உடனே நிறுத்துங்கள்** என்று அச்சடித்து தங்கள் எதிர்ப்பை தெரிவித்துள்ளார்கள். ஏற்கனவே அவர் பெரும் பணக்காரர். ஆகவே இந்த பணம் ஒன்றும் அவருக்கு பெரிதல்ல என்றாலும் கிறிஸ்தவ **சபைக்கு** தலைவராக இருந்துகொண்டு **இந்து ஆலயங்களுக்கும்** போய் கும்பிட்டு வருவது **கிறிஸ்துவின் சபைக்கு** செய்யும் **துரோகம்** மட்டுமல்ல கர்த்தராகிய **இயேசு கிறிஸ்துவுக்கு** செய்யும் **பெரும் துரோகமாகும்.**

- ☐ **மார்தோமா** சபையிலும் **தலைமை பிஷப்பாக** (வலிய மெத்ரோ போலித்தா) இருந்து மரித்துப்போன **பிஷப் கிறிஸ்சோஸ்டம்** அவர்கள் **கிருஷ்ணன்** கோவிலுக்கு சென்று மாதம் ஒருமுறை மாலையிட்டு தொழுதுகொள்வது வழக்கம் என்கிறார்கள். அவருடைய மாலையிடும் புகைப்படத்தையும் ஜாமக்காரனில் வெளியிட்டேன்.
- ☐ **மெட்ராஸ்** CSI **பிஷப் அசரியா** அவர்கள் **காளி கோவிலுக்கு** சென்று **கை கூப்பி தொழுவதையும்** ஜாமக்காரனில் வெளியிட்டேன்.

**எல்லா மதமும் ஒன்று – எல்லா தெய்வங்களும் ஒன்று** என்ற **நவீன** சமரச கொள்கையை கைக்கொள்ளும் **கிறிஸ்தவர்கள்** பெருகி வருகிறார்கள். இதை வாசிப்பவர்கள் இப்படிப்பட்ட உபதேசத்துக்கு ஒரு நாளும் ஒத்துப்போகாதீர்கள். பொங்கல் நாளை மதிக்காதீர்கள்.

இயேசு சொன்னார், **நானே** வழி **நானே** சத்தியம் **நானே** ஜீவன் **நானே** வாசல் என்று கூறி இந்த இயேசு என்னும் வாசல் வழியாக அல்லாமல் வேறு எந்த வழியாகவும் **பரலோகம் போக** முடியாது.

**இயேசுவாலன்றி வேறொருவராலும் இரட்சிப்பு** (விடுதலை) இல்லை (மனிதர்களாகிய) **நாம் இரட்சிப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய** (இயேசு) **என்னும் நாமமேயில்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை.** அப். 4:12

இப்படிப்பட்ட ஆபத்திலிருந்து அனைத்து சபை கிறிஸ்தவ மக்களையும் ஜாமக்காரன் வாசகர்களையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து காப்பாற்றுவாராக. ஆமென்.

வாசகர்கள் Onlineல் அனுப்பிய காணிக்கைகள் யாவும் கிடைக்கப்பெற்றேன். நன்றி.

– டாக்டர் **புஷ்பராஜ்**

விஸ்வவாணி ஸ்தாபகர் சகோ. **எமில்** அவர்கள் எழுதிய சரித்திர கட்டுறை

# இயேசு கிறிஸ்துவின் பிறப்பு பிதாவாகிய தேவனின் திட்டம்

பெத்லகேம் பாலன் பிறந்தபோது காணப்படும் முக்கிய பாத்திரங்களான **யோசேப்பு, மரியாள், அகஸ்து ராயன், ஏரோது, மேய்ப்பர்கள், சாஸ்திரிகள்** முதலான நபர்களைப்பற்றி நாம் பார்க்க இருக்கிறோம்.

அந்த நாட்களிலே யூதர்கள் முறைமையின்படி நிச்சய தாம்பூலம், திருமண வைபவம் என்பது இரண்டு தனி நிகழச்சிகள் அல்ல. நிச்சய தாம்பூழம், திருமண வைபவம் இந்த இரண்டுக்கும் நடுவில் பெண் விதவையாக இருந்தால் ஒரு மாத கால இடைவெளியும், கன்னியாக இருந்தால் ஒரு வருட கால இடைவெளியும் இடம்பெறும். நிச்சயம் செய்யப்பட்ட பெண் **திருமண பெண்** என்று அழைக்கப்பட்டால் **மனைவி** என்றே அழைக்கப்படுவாள்.

எனவே தான் பரிசுத்த லூக்கா 2ம் அதிகாரம் 4ம் வசனத்திலே **தனக்கு மனைவியாக** நியமிக்கப்பட்டு கர்பவதியான **மரியாளுடனே** குடிமதிப்பு எழுத யோசேப்பு பெத்லகேம் ஊருக்கு சென்றான் என்று பார்க்கிறோம்.

அந்த நாட்களிலே **12 வயது வந்த எந்த பெண்ணும்** அரசாங்கத்துக்கு **வரி கட்டவேண்டும். குடிமதிப்பு எழுதவேண்டும்.** எனவேதான் நிச்சயமாகி, **திருமணம் ஆகாது இருந்தாலும்** தன் மனைவி என்ற பொறுப்புக்குள் வந்த **மரியாளையும்** பெத்லகேமிற்கு யோசேப்பு கூட்டிச் செல்லவேண்டியதாயிற்று.

நிச்சய தாம்பூலம் என்பதற்கும், திருமணம் என்பதற்கும் இடையே உள்ள ஒரு வருட காலத்தில கன்னியாக இருந்த மரியாளின் வயிற்றில் **பரிசுத்த ஆவியானவர்** அற்புத கிரியை செய்து அவளை **கர்ப்பம் தரிக்க செய்தார்.** எனவேதான் பரிசுத்த மத்தேயு முதலாம் அதிகாரம் 18ம் வசனத்திலே **கர்ப்பவதி ஆனாள்** என்று எழுதப்படுள்ளது. ஆனால் இதனை யோசேப்பினால் புரிந்துகொள்ள முடியவில்லை.

நிச்சயமானாலும் **திருமணம் ஆகவில்லை.** ஒரு வருட இடைவெளி உண்டு. நிச்சயமானவுடன் அவன் **புருஷன்** என்றும் அவள் **மனைவி** என்றும் யூத நியமனப்படி பேர்பெற்றுவிட்டாலும் இன்னும் **குடும்ப வாழ்வு துவங்கவில்லை.** மனைவி கர்ப்பம் தரித்தது எப்படி ? யோசேப்பின் **அகப்போராட்ம் அதிகரித்தது.**

பரிசுத்த மத்தேயு முதலாம் அதிகாரம் 19ம் வசனத்தில் **யோசனையாய் இருந்தான்** என்று எழுதப்பட்டு இருக்கிறது. மரியாளுக்கு அப்பொழுது **வயது 15** கூட ஆகவில்லை. அவள்

யோசேப்பின் சொந்த **மாமன் மகள்.** அவளை அவமானப்படுத்த அவனுக்கு மனமும் இல்லை. அவன் **நீதிமானயிருந்து** என்று 19ம் வசனம் ஆரம்பிக்கிறது . அதன் பொருள் அவன் **நியாயப்பிரமானத்தை** பிசகு இல்லாமல் கைக்கொண்டு நடந்து வந்தவன் என்பதாகும். புருஷனின் சித்தப்படியில்லாது வேறு வழியில் **கர்ப்பவதியான பெண்களை** நியாயப்பிரமானத்தின்படி **கல்லெறிந்து** கொல்லவேண்டும் என்பதை அவன் அறிந்திருந்தான்.

அயினும் அவ்விதம் செய்ய மனம் சம்மதிக்கவில்லை. காரணம் அது மரியாளுக்கு ஒரு பெரிய அவமானமாகிவிடும். அவன் நீதிமானாக இருந்தும், நியாயப்பிரமாணம் அனைத்தும் பிசகு இல்லாமல் கடை பிடிக்கிறவனாக இருந்தும். **பழைய ஏற்பாட்டில் இதோ ஒரு கன்னிகை** கர்பவதியாகி குமாரனை பெறுவாள். **அவருக்கு இம்மானுவேல்** என்று பேரிடுவார்கள் என்று எழுதியிருப்பதை அவன் இன்னும் உணரவில்லை.

**பழைய ஏற்பாட்டு** புத்தகம் மட்டுமல்ல. **பற்பல பழமையான ஏடுகளில்கூட** மானிட ஈடேற்றத்திற்காக **ஒரு புண்ணிய புருஷர்** உலகத்திலே ஒர் **கன்னிகையின் வயிற்றிலே** உதயமாவார் என கூறியுள்ளனர். எனவேதான் அந்த நாட்களிலே **இராஜ குமார்த்திகளின்** சிலர் திருமணம் செய்யாமல் **தங்கள் வயிற்றில் அந்த புண்ணியவான் உருவாகட்டும்** என்று நோன்பு இருந்தார்கள். அந்த உலக இரட்சகர் தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டவள் வயிற்றில் உருவாகிவிட்டார் என்பதை நீதிமானாகிய யோசேப்பு அறியாமல் அங்கலாய்த்தான்.

தச்சுத்தொழில் அவன்தொழில். தொழிலில் உற்சாகம் இழந்தான். உணவில் பிரியமில்லை, வருத்தம் நெஞ்சை அடைத்தது. நிச்சய தாம்பூலம் ஆன இளைஞன் புதுமுகக் களைகொண்டு இதய பூரிப்புடன் இருப்பான். யோசேப்போ யோசனைக்குமேல் யோசனைசெய்து அளப்பதற்கரிய அகப்போராட்டம் கொண்டான். போராட்டம் அத்துமீறுமுன் கர்த்தருடைய தூதன் செயலில் இறங்கினான்.

அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து அவளை அவமானப்படுத்த மனமில்லாமல் **இரகசியமாய் அவளைத் தள்ளிவிட** யோசனையாயிருந்தான். அவன் இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில் **கர்த்தருயை தூதன்** சொப்பணத்தில் அவனுக்கு காணப்பட்டு தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே. அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனை பெறுவாள். அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். (மத். 1:19-21)

கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் தோன்றினான். பரிசுத்த மத்தேயு முதல் இரண்டு அதிகாரங்களில் **5 முறை சொப்பனம்** என்ற சொல் வருகின்றது.

அவை முதலாம் அதிகாரம் 20ம் வசனம் இரண்டாம் அதிகாரம் 12,13, 19, 22 ஆகிய வசனங்களாகும். இதில் மத்தேயு 2ம் அதிகாரம் 12ம் வசனத்தில் **சொப்பனத்தின்** மூலம்

**சாஸ்திரிகளிடமும்** மற்ற எல்லா வசனத்திலும் **சொப்பனத்தின் மூலம்** யோசேப்பினிடத்தில் **கர்த்தருடைய தூதன்** பேசிக்கொண்டே இருந்தான்.

உலக இரட்சிப்பின் திட்டத்தில் பிதாவாகிய தேவன் எடுக்கும் முயற்சியில் அல்லது திட்டத்தில் **பிசாசும் அவனைச் சார்ந்தவர்களும் தவிர,** யோசேப்பு போன்ற நீதிமான்கள் எவரும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

எனவே கவலையுடன் இருக்கும் யோசேப்பே கவலைப்படாதே உன் கவலைக்கு காரணம் உன் மனைவியின்மேல் எழும்பும் சந்தேகமே. அவள் பரிசுத்தவாட்டி, மாசு மரு அற்றவள். கருவுற்றதற்கு காரணம் பிதாவின் சித்தம் – திட்டமாகும். அது பரிசுத்த ஆவியானவருடைய வல்லமை ஆகும். அவளது கருப்பை குற்றமற்றது **என்னில் குற்றம் உண்டென்று யார் சொல்லக்கூடும்** என்ற பாவம் அறியாதவரை சுமந்துகொண்டு இருப்பது.

ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறப்பது **அவதாரம்,** பரிசுத்த ஆவியினால் ஒரு கன்னிகையிடம் **பிறப்பது வெளிப்பாடு.** இயேசு **ஓர் அவதாரம் அல்ல,** பிதாவாகிய தேவனின் வெளிப்பாடு சந்தேகப்பட அவசியம் இல்லாதவர்கள் மேல் சந்தேகப்படுவது சந்தேகப்படுவர்களுக்கே சங்கடம் விளைவிக்கும்.

யோசேப்புக்கு நித்திரை தெளிந்தது. அந்நேரமே கூட புத்தியும் தெளிந்தது. உட்கார்ந்து யோசித்து கொண்டிருந்தவர் குதித்து எழுந்தார். **குடிமதிப்பு** எழுத சுமார் **95 மைல்** நடந்து பெத்லகேம் போக ஆயத்தப்பட்டார். **குடிமதிப்பு** எழுத வேண்டும், மரியாளுக்கு பிள்ளை **சுகமாக பிறக்கவேண்டும்.** பிள்ளைக்கு இயேசு என்று பெயரிட வேண்டும். மூன்று பொறுப்புள்ள உணர்ச்சிகளுடன் அக மலர்ச்சியும் கொண்டதால் அந்த நீண்ட பிரயாணம் அவர்கள் இருவருக்கும் கடினமாக தோன்றவில்லை.

**கணவன் மனைவி** என்பார் **கருத்து ஒற்றுமையுடன் வாழும் குடும்பங்களில்** பணம் இல்லை என்றாலும் **ஆரோக்கியம் கெடுவதில்லை,** வசதி இல்லை என்றாலும் **நிறைவு நீங்குவதில்லை.**

பெத்லகேம் எருசலேமிலிருந்து ஐந்து மைல் தெற்காக அமைந்து உள்ளது. முன்பு இந்த ஊர் பெத்லாமு என்று அழைக்கப்பட்டது. கானானியர் இங்கு வாழ்ந்த காலத்தில் இப்பெயர் கொடுக்கப்பட்டது. **கடவுளின் வீடு** என்று பொருள்

முன்பு யோசுவாவின் தலைமையில் இஸ்ரவேலர் கானானை சுதந்தரித்த பொழுது பெத்லாமு என்பது **பெத்லகேம்** என்று பெயர் மாற்றம் பெற்றது. **பெத்லகேம்** என்றால் **அப்பத்தில் வீடு** என்று பொருள்.

எப்பிராத்தா என்ற ஒரு குடும்பம் பூர்வ காலத்தில் குடியேறியுள்ளது. எனவே இந்த ஊர் எப்பிராத்தார் என்று ஆதியாகமம் 35ம் அதிகாரம் 19வது வசனத்திலும் 48ம் அதிகாரம் 7வது வசனத்திலும் ரூத்தின் புஸ்தகத்தில் 4ம் அதிகாரம் 11வது வசனத்திலும் கூறப்பட்டுள்ளது.

எப்பிராத்தா என்ற குடும்பத்தின் மக்களான ஒரு சிறிய கூட்ட மக்களே அந்த ஊரில் வசித்து வந்தனர். எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும் என்று துவங்கி இஸ்ரவேலை ஆளப்போகிறவர்**உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்.** அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது என்று மீகா 5:2. அந்த மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனம் கூறுகின்றது.

எப்பிராத்தா என்றால் செழிப்பான இடம் என்று பொருள். எனவேதான் பெத்லகேம் அப்பத்தின் வீடு என பொருள்கொண்டது. **தாவீது** பிறந்த இடம் **பெத்லகேம்** என்று 1 சாமுவேல் 17:12ம் 20:6ம் கூறுகின்றது. மரியாளுக்கு நியமிக்கப்பட்ட **யோசேப்பு** பிறந்த இடமும் **பெத்லகேம்தான்** ஜீவ அப்பமாகிய **இயேசு கிறிஸ்து பிறந்த இடமும் பெத்லகேம்தான்.** பரிசுத்த லூக்கா 2ம் அதிகாரம் 1ம் வசனத்தில் அந்த நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்பட வேண்டும் என்று அகஸ்து ராயனால் கட்டளை பிறந்தது என்று வாசிக்கிறோம்.

ராஜாதி ராஜன் கிறிஸ்துவின் பிறப்பினை ஒட்டி இரண்டு பேரரசர்கள் பெயர்கள் சம்மந்தப்படுகிறது. முதலில் வருகிறவர் அகஸ்து ராயன் என்பவர். கி. மு. 27 முதல் கி.பி. 14 வரை ரோம சர்க்ரவர்த்தியாக இருந்தவர். அன்றைய உலகின் உச்ச நாற்காலியின் வீற்றிருந்தவர். சர்வ அதிகாரியும் சக்ரவர்த்தியாகவும் இருந்த இவர் கண்கண்ட நிலப்பறப்புகளையெல்லாம் தன் மன்னனுடன் இணைந்து கொண்டிருந்தவர். ரோம சமாதானம் என்ற பெயரில் உலகை தன் குடைக்குள் மடக்க விருப்பியவர். அதே சமயம் உண்ணதத்தின் மகிமை பூமியில் சமாதானம் என்ற மனிதன் கொடுக்கவும், எடுக்கவும் முடியாத ஓர் தேவ சமாதானம். ஏதேனில் தவறிய மானிடருக்கு பெத்லகேமிலே பிறக்கிறது என்பதை அறியாதவர்.

சீயோனிலிருந்து வேதமும் எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அந்த தேவ சமாதான மதமாற்றத்தால் வரும் சமாதானமும் அல்ல மனமாற்றதால் வரும் சமாதானம். பட்டயம் பலாத்காரத்தினால் வரும் சமாதானம் அல்ல. அன்பு மன்னிப்பு , ஒப்புரவாகுதல் தரும் சமாதானம்

கேள்விக்குறிகளுடன் பிறக்கும் சமாதானம் அல்ல. அனைத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கும் தேவ சமாதானம். அந்த சமாதானம்பற்றி ஏசாயா 2ம் அதிகாரம் 4வது வசனத்திலும் மீகா 4ம் அதிகாரம் 3ம் வசனத்திலும் ஒரே விதமாக கூறியிருக்கிறார்கள்.

**சண்டையிட்டு அழிக்க தயாரிக்கப்பட்ட பட்டயங்கள்**

**விவசாயம்** செய்து செழிக்க உதவும் **மன்வெட்டிகளாக** மாற்றப்படும். மனிதர்கள் நடுவில் **அன்பும் நம்பிக்கையும்**, சகோதரத்துவமும் பெருகும். யுத்தம் மறையும். சமாதானம் நிலைக்கும்.

யோசேப்பு தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டு கர்ப்பவதியான மரியாளுடன் குடிமதிப்பு எழுதப்படும்படி நாசரேத் ஊரிலிருந்து 95 மைல் தூரத்திலிருக்கும் பெத்லகேமுக்கு மரியாளை

ஒரு கழுதையில் ஏற்றி நாள் ஒன்றுக்கு 20-25 **மைல் வீதம்** நான் நான்கு நாட்கள் நடந்து நிறை கர்பினியான தன் மனைவியுடன் **பெத்லகேம் அடைந்தான்.** களைப்புடன் வந்த அவர்களுக்கு இளைப்பாற பெத்லகேம் என்ற சிற்றூரில் **இடமில்லை.**

**சத்திரங்கள்** குடிமதிப்பு எழுத வந்த மக்களால் **நிறம்பி வழிந்தது.** பெத்லகேம் யோசேப்பிற்கு ஒரு புதிய இடம் அல்ல. அவருக்கு நண்பர்களும் உறவினர்களும் அங்கு உண்டு. பெருந்தன்மை பெற்ற அவர் **எவருக்கும் பாரமாக இருக்க விரும்பாமல்** ஓர் சிறிய **இடம் தேடி அலைந்தார்.**

மரியாளின் பிரசவ நேரம் நெருங்கிக்கொண்டிருந்த வேலையில் மலையில் மாடுகளுக்காக வெட்டப்பட்ட ஒரு சிறிய குகையை கண்டுபிடித்தார். அவ்விடத்தில் இருக்கையிலே மரியாளுக்கு பிரசவ காலம் ஏற்பட்டது.

அவள் தன் முதற்பேரான குமாரனை பெற்று சத்திரத்தில் அவர்களுக்கு இடம் இல்லாதிருந்தபடியினால் பிள்ளையை துணிகளின் சுற்றி முன்னணியில் கிடத்தினார்கள். **முன்னனை என்பது மலைகளில் கால் நடை தங்க செதுக்கப்பட்ட சிறிய குகை.**

கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த பிரபல எழுத்தாளரான ஜஸ்டின் மார்டையர். இயேசுவின் பிறப்பை பற்றி எழுதியுள்ளார். யோசேப்பிற்கு பெத்லகேம் ஊரில் எங்கும் இடம் கிடைக்காத காரணத்தால் ஊருக்கு பக்கத்தில் உள்ள **சிறிய குகையில் தங்கினான்**.

இங்கு மரியாள் கிறிஸ்துவை பெற்றெடுத்து முன்னணையில் கிடத்தினால் என்று கூறப்பட்டுள்ளது.

மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரபல எழுத்தாளர் **ஆரிகன்** என்பவர் கிறிஸ்துபிறந்த சிறிய குகையை **சுட்டிக்காட்டுகின்றார். ஜெரோம்** என்ற எழுத்தாளர் மரியாள் தானே **தாயாகவும்** தாதி பெண்ணாகவும் இருந்து கிறிஸ்துவை பெற்றெடுத்து முன்னணையில் கிடத்தினார் என்று கூறுகின்றார்.

கி.பி. 325ம் ஆண்டு சிலுவை தரிசனம் பெற்று கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை பதித்த **கான்ஸ்டான்டின்** என்ற மன்னன் உலக இரட்சகர் பிறந்த அந்த **சிறிய குகையை** அழகிய **ஆலயமாக மாற்றிவிட்டா**ர்.

அதுவே உலகில் உள்ள அனைத்து கிறிஸ்தவ ஆலயங்களிலும் மிக பழைமையான ஆலயமாக கருதப்படுகின்றது.

**கிறிஸ்துவின் பிறப்பு** சரித்திர **வலுப்பெற்றது**. **புராணங்களில்** வரும் ஒரு **புண்ணிய அவதாரமாக அவர் வரவில்லை**. மானிட இரட்சிப்புக்காக உலக வரலாற்றில் ஓர் புதிய திருப்பம் அருள அவர் வெளிபட்டார். அந்த வெளிப்பாட்டிற்கு பிறகு உலக சரித்திரம் **கிறிஸ்துவுக்கு** முன் **கிறிஸ்துவுக்கு** பின் அதாவது **கி.மு., கி.பி.** என்று மாற்றப்பட்டது.

வரலாறு எழுதும் எவரும் சரித்திரத்தை கி.மு. கி.பி. என்று பிரித்து கிறிஸ்துவை நடுவாக வைத்தே இன்றும் எழுதிக்கொண்டிருக்கிறார்.

பாவம் மன்னிப்பு அருள வந்த இரட்சகரின் பிறப்பினை ஏன் மெய்ப்பர்களுக்கு அளிக்கவேண்டும் ? அந்த மெய்ப்பர்கள் அனைத்து ஆடுகளையும் மேய்க்கும் பொதுவான மெய்ப்பவர்களாக தெரியவில்லை.அவர்கள் மெய்த்த ஆடுகள் சிறப்பான ஆடுகள்.

ஆண்டு தோறும் பஸ்கா பண்டிகையில் **பலியிடப் படவேண்டிய ஆடுகள்.** ஊரில் உள்ள மொத்த ஆடுகள் அல்ல. மனிதனின் பாவ நிவர்த்திக்கென்று பலியாக நியமிக்கப்பட்ட ஆடுகள்.

உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்க பிறந்த தேவ ஆட்டுக்குட்டி. முன்னணையில் துணிகளில் சுற்றி கிடத்திவைக்கப்பட்டுள்ளார். இதுவே உங்களுக்கு அடையாளம் என்றவுடன் முன்னணை என்றால் ஒரு சிறிய குகை என்பதை நன்றாக அறிந்த அவர்கள் அதை புரிந்துகொண்டார்கள்.

பயப்படாதேயுங்கள் மெய்ப்பவர்களே இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்காக தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் என்ற மகத்துவமுள்ள ஓர் அறிவிப்பை அவர்கள்பெற்றனர். ஒவ்வொரு பஸ்கா பண்டிகைக்கும் பலியாக வெட்டப்படும் ஆடுகள் ஏராளம். அந்த ஆடுகளை பராமரித்து மேய்க்கும் மேய்ப்பவர்கள்தான் அவர்கள்.

பாவம் செய்தது மனிதாக இருக்க அவன் பாவச்செயலுக்கு வெட்டப்படுவது எவ்வித தவறும் அறியாத ஓர் மிருகமாக இருந்தது. எருசலேம் தேவாலயத்திற்கு அருகில் ஓடும் **கேதரோன் ஆறு.** பஸ்கா பண்டிகை நாட்களில் வெட்டப்பட்ட ஆ**டுகளின் இரத்தத்தில் நிறைந்தது** பொதுவாக சிவப்பு நிறமாகவே ஓடும். அத்தனை திரளான ஆடுகள் இனி வெட்டப்பட தேவையில்லை.

**தேவ ஆட்டுக்குட்டி பிறந்து விட்டார்** என்ற அறிவிப்பு அவர்களுக்கு கிடைத்தது. சற்றும் தாமதிக்கவில்லை. மேய்ப்பவர்கள் விரைந்து புறப்பட்டனர். பஸ்காவாகிய கிறிஸ்துவை பற்றி தங்களுக்கு சொல்லப்பட்ட சங்கதியை கண்ணில் பட்ட அத்தனை பேருக்கும் **பிரசித்தம் பண்ணினார்கள்.** ஏனெனில் அன்றும் இன்றும் மனிதருக்கு மிகுந்த **சந்தோஷம் உண்டாகும்** செய்தியாகவே **நற்செய்து** விளங்குகிறது. மேய்ப்பவர்கள் கூறிய சாட்சி யோசேப்பு, மரியாள், இருவரையும் கூட ஆச்சரியத்திற்குள் ஆழ்த்தியது. மரியாள் இதயத்தில் அதை தியானிக்க தொடங்கினார்.

அரசன் ஏரோதுவைப்பற்றி பரிசுத்த மத்தேயு 2வது அதிகாரத்தில் கூறுகிறார். ஜொசிபஸ் என்ற சரித்திர ஆசிரியர் ஏரோதுவை பற்றி கூறும்போது கோபமே அவன் குணம் சீற்றதே அவன் சின்னம் என்று எழுதுகிறார். சரித்திரத்தில் கைகளில் சுத்தம் இழந்து இரத்தக்கறைக்கண்ட மனிதர்களில் ஏரோது முன் நிற்பவன்.

கி.மு. 37ல் பதவிக்கு வந்துவுடண் சனகெரிம் சங்கம் உறுப்பினர்கள் உட்பட அவனை எதிர்த்த 45 நபர்களைக் கொன்று 16 வயதுகூட நிறம்ப பெறாத அவனது மைத்துனனை பிரதான ஆசாரியனாக மாற்றியவன்.

கி. மு. 35ல் அதே மைத்துனனை எரிக்கோவின குளத்தில் மூழ்கடித்து கொள்ள கட்டளை கொடுத்தவன். கி.மு.34ல் தன் மாமாவை கொன்றவன். கி.மு.29ல் அவன் உயிராக நேசித்த அவன் மனைவியும் கஷ்மணி மரியத்தை கொன்று பின்அடக்க முடியாதபடி அழுதவன். அடுத்த ஒரு சில மாதங்களில் மனைவியின் தாயை கொன்றவன். கி.மு. 25ல் தன் சகோதரியின் புருஷனை கொன்றவன். அலெசாண்டிரிய பல்கலைகழகத்தில் படித்து பட்டம் பெற்று வந்த **தன் இரு பையன்களையும்** வீட்டிற்கு திரும்பிய உடன் **கொன்றவன்**. பன்னிக் கறி மட்டும் அவன் சாப்பிடுவதில்லை. அவன் மாளிகையில் **பயம் இல்லாமல் வாழ்ந்த** ஒரே ஒரு வஸ்து **பன்றிதான்.** எனவே **ஏரோதுவின் மகனாக பிறப்பதை விட** அவன் வீட்டு பன்றியாக பிறப்பது மேல் என்ற பழமொழி பிறந்தது. அவனது அன்பு செல்வங்களை கொன்றது நல்லது அல்ல என பேசிய 300 அரசு ஊழியர்களையும் தொடர்ந்து கொன்ற இந்த ஏரோதுதான் பரிசுத்த மத்தேயு 2 வது அதிகாரத்தில் தோன்றுகிறான்.

**கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள்** இவன் எப்படிப்பட்டவன் என்பதை அறியாமல் யூதருக்கு இராஜாவாக பிறந்திருக்கிறவர் எங்கே ? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தை கண்டோம் என்றார்கள்.

இந்த சாஸ்திரிகள் எருசலேமின் சூழ்நிலையை அறியாதவர்கள். ஏரோதின் மனநிலையை புறியாதவர்கள். அவர்கள் எத்தனை பேர் வந்தார்கள் என்று வேத புத்தகம் கூறவில்லை. அவர்கள் படைத்த காணிக்கை **பொன் வெள்ளி தூப வர்க்கம்** என்ற மூன்றே மூன்றாக இருந்ததால் வந்தவர்களுக்கும் மூன்றே மூன்று சாஸ்திரிகளாக இருந்திருக்க வேண்டும். அவர்கள் பெயர் காஸ்பர், மிஸ்கொயர், பெல்தஸார் என்பதே ஆகும். 9வது நூற்றாண்டில் ஒருவர் கூறியதிலிருந்து மூன்று சாஸ்திரிகள் என்று வழங்கலாயிற்று.

சாஸ்திரிகள் யூதருக்கு ராஜாவாக பிறந்திருக்கிறவர் எங்கே என்று ஏரோதை கேட்டார்கள். ஏரோது கிறிஸ்துவனாவர். எங்கே பிறப்பார் என்று தன் அரண்மனையில் உள்ள வேத பாரகரை கேட்டான். வேத பாரகர் **மிகா. 5ம்** அதிகாரம் 2ம் வசனத்தை சுட்டிக்காட்டினார்கள். ஏரோது இரகசியமாய் சாஸ்திரிகளுடன் பேசினார். அவர்கள் யூதருக்கு இராஜாவாக பிறந்திருக்கிறவரை ஆராதித்தபின் தன்னிடம் திரும்பி வந்து விபரமாக கூறிக்கொண்டான். காரணம் அவனுக்கு அவரை தரிசிக்க ஆசை என்றான்.

**மேய்ப்பர்கள்** பாலகனை தரிசிக்க வந்தபொழுது அவரை **மாட்டுக்கொட்டாயில்** கண்டு தொழுதார்கள். ஆனால் **சாஸ்திரிகள்** வந்த பொழுது பாலகனை **வீட்டில்** பிரவேசித்து சாஷ்டங்கங்கள் செய்தவர்கள் என்று பரிசுத்த மத்தேயு 2ம் ஆதிகாரம் 11 வசனம் கூறுகின்றது.

நீண்ட தொலைவிலிருந்து பல வாரங்கள் பிரயானப்பட்ட சாஸ்திரிகள் வருவதற்கு முன் யோசேப்பு மரியாளுக்கும் திருமைந்தனுக்கும் ஏற்ற ஒரு வீடு அமர்த்தி அங்கே குடியேறிவிட்டான். அச்சமயம் தான் லூக்கா 2ம் அதிகாரம் 21 வசனம் கூறுவது போன்று **எட்டாவது நாளில்** பிள்ளைக்கு விருத்தசேதனமும் செய்யப்பட்டன.

பெத்தலகேமிலிருந்து 5 மைல் தூரத்தில் உள்ள எருசலேம் தேவாலயத்திற்கு சென்று **லேவியராகமம் 12ம் அதிகாரம்** 2 முதல் 8 வசனங்கள் கூறுவதுபோன்று பிள்ளை பிறந்து 40வது நாள் கடந்த பின் மரியாளின் **சுத்திகரிப்பின் நாட்களும்** நிறைவேறப்பட்டன. இவை அனைத்திற்கும் பின்பு தான் சாஸ்திரிகள் உடைய வருகையும் இடம் பெற்ற அனைத்து மனிதரின் உள்ள கிடக்கையையும்அறிந்து தேவன் கபடற்ற மக்களை சத்துரிக்களின் கண்களில் விழாமல் காக்கவும் கூடியவராகவும் இருக்கிறார். இரவில் தூங்கும் வேளையில் சொப்பணத்தில் ஓர் எச்சரிப்பு சாஸ்திரிகளுக்கு வந்தது. ஏரோதிடத்திற்கு திரும்பி செல்ல வேண்டாம் என்பதே அந்த எச்சரிப்பு. வேறு வழியாக அவர்கள் தங்கள் இடம் சென்றனர். அதன்பின் அவர்களைப்பற்றி குறிப்பு அவதத்தில் இடம்பெறவில்லை.

அதே முறையில் யோசப்பிற்கும் கர்த்தருடைய தூதன் சொப்பணத்தில் வந்தான். ஏரோது பிள்ளையை கொலை செய்ய தேடுவான், ஆதலால் நீ எழுந்து பிள்ளையையும், அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்திற்கு ஓடிப்போய் நான் உனக்கு சொல்லும் வரைக்கும் அங்கேயே இரு என்றான். உடனே அவன் படுக்கையை விட்டு எழுந்து இரவில் தானே பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்திற்கு போனான் என்று பரிசுத்த மத்தேயு 2ம் அதிகாரம் 13,14 அகிய வசனங்கள் கூறுகிறது.

சுமார் 1 வாரம் பிரயாணம் செய்து எகிப்தை அடைந்தார்கள்.

பரிசுத்த மத்தேயு 2ம் அதிகாரம் 19,20 ஆகிய வசனங்கள் கூறுவது போல கொடூர ஏரோது இறந்த பின் யோசேப்பு சொப்பணத்தில் தூதனால் அதனை அறிந்து இஸ்ரவேல் தேசத்திற்கு பிரயாணப்பட்டான். தொடர்ந்து கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத் என்னும் ஊரில் வந்து வாசம் பண்ணினான். அப்போது திருகுமாரனுக்கு 2 வயதாகும். பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாகவும் திருவுலம் பற்றிய தேவன் திருக்குமாரன் மூலம் இயேசு என்னும் நாமத்தை மனுகுலத்திற்கு கொடுத்தார்.

வெள்ளத்தில் சிக்கியவன் தனக்கு எதிரே வரும் மிதப்பு கட்டையை இறுகப்பற்றிக் கொள்வதுபோல அந்த அற்புத நாமத்தை நோக்கியவர்கள் மரணத்திற்கு தப்பிப் பிழைப்பவர்கள். மானிட பாவ நிவர்த்திக்கு பெத்லகேமில் பிறந்த இயேசுவின் நாமமே அன்றி வேறு நாமம் வசனத்தின் கீழும் மனுஷருக்குள்ளும் காணப்படவில்லை.

**கடவுள் மேல் பக்தியாக இருக்கிறேன் என்பதின் இரகசியம். இயேசுவை தேவனாக அறிந்துக்கொள்ளும்** அறிவே ஆகும். ஏனெனில் தேவ பக்திக்குறிய இரசியமானது எவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகாமேன்மை உள்ளதாக அமைந்துள்ளது.

தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். ஆவியில் நீதியுள்ளவர் என்று விளங்கப்பட்ட தேவ தூதர்களால் காணப்பட்டார். புற ஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார். உலகத்தில் விசுவாசிக்கப்பட்டார். மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார். அவருடைய மகிமையை கண்டேன். அது **பிதாவுக்கு ஒரே பேரானவருடைய மகிமைக்கு** ஏற்ற மகிமை.



# தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்

– நன்றி **சத்திய வசனம்**

வியப்பளிக்கும் அழகிய சென்னை நகரத்தின் வீதிகளுக்கு நான் மாணவனாக சென்று இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கித்த நாட்களிலிருந்து இன்னாள் வரை பாரதத்தில் உள்ள எந்த ஒருவரின் மனதையும் முக்கியமாக என்னை ஆட்கொண்டிருந்த சிந்தனை **தீமையின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்** என்பதாகும்.

வேதாமத்தின் ஆரம்பத்திலிருந்து முடியும் வரை எழதப்பட்டிருக்கும் விபரங்கள் **விடுதலை அளிக்கும் தேவனுடைய கிரியைகளை** ஒன்றன்பின் ஒன்றாய் வெளிப்படுத்துகிறதாய் இருக்கிறது.

முற்பிதாக்கள் அபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, மோசே, நியாதிபதிகள் தாவீது சாலமோன் நாட்களிலும் பின் **பாபிலோன் சிறையிலிருக்கும்போது** கண்ணீரிலும் வேதனையிலும் ஊடாக கடந்து போகும். தாங்களை விடுவிக்க போகும் மீட்பரை ஒரு **மேசியவாய்** எதிர்பார்த்த கணவு கண்ட நாட்கள் வரை வேதாகமத்தின் எழுதியிருப்பது எல்லாம் **மீட்பளிக்க போகும் ஒருவரைப்பற்றி** கொஞ்ச கொஞ்சமாக வெளிப்படுவதாய் இருக்கிறது. அதாவது **வேதாகமம் விடுதலை** அளிப்பதை பற்றிய செய்தியை அறிவிக்கிறது. அதன் பின்னர் நாம் மேசியா என்று அழைப்பவரை பற்றிய விவரங்கள் கொண்ட **சுவிசேஷங்களுடன்** ஆரம்பித்து வெளிப்படுத்தின விசேஷத்தின் **மகிமையான தரிசனங்களுட**ன் முடிவடையும் வரை தீமையினின்று விடுவிக்கும் இரட்சிப்பை பற்றிய அறிவிப்புகளையே காண்கிறோம்.

மனிதனை தீமையினின்றி இரட்சிப்பதைப்பற்றி வேதாகம அறிவிப்புகள் நான்கு கட்டங்களாக ஒன்றன் பின் ஒன்றாய் வெளிப்படுத்துகின்றன என்று நாம் அறிய கூடும்.

முதல் கட்டத்தில் **மக்கள்** தங்கள் **குற்றங்களை** மற்றவர்கள் மீது **சுமத்திவிட்டு** தாங்கள் **விடுதலை** பெற்றுக்கொள்ளலாம் **என்று எண்ணினார்கள்.** முற்காலத்திய பாவ நிவாரண பலி அசாரிப்பின்பொழுது ஒரு **வெள்ளாட்டு கடாவின்** கொம்புகளை ஒரு துணியால் சுற்றினார்கள் (ஆரோன் தன் இரு கைகளையும் ஆட்டின் தலைமேல் வைத்து அறிக்கை செய்ததால்) அந்த துணியில் முழு இஸ்ரவேல் ஜனத்தின் சகல பாவங்களும் ஆக்கிரமங்களும் அந்த ஆட்டின்மேல் இறங்கியதாக எண்ணப்பட்டது. பின் அந்த ஆட்டை ஜனங்கள் குடியிருப்பபை தாண்டி வனாந்திரத்திலே போக விட்டார்கள். மக்களுடைய பிரச்சனைகளையும், பாவங்களையும் இந்த ஆடு சுமந்துகொண்டுபோய்விட்டது என்று பாவித்துக்கொள்ளப்பட்டது. இந்த ஆட்டை **போக்காடு** என்று அழைத்தார்கள். **போக்காடுவின்** அடிப்படையான எண்ணம் மூட **நம்பிக்கையை** கொண்டது. இது பழங்காலத்தியது என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அது நாளையைபோல நவீனமானதாகும். உண்மை என்னவென்றால் தினந்தேறும் நம்முடைய பாவத்தினின்று நம்மை

விடுவித்துக்கொள்வதற்கு சிறந்த வழி என்னவென்றால் **நாம் செய்த குற்றத்தை வேறு ஒருவரின் மீது போடுவதே.**

நம் வீடுகளிலேயே நம்முடைய நாள் எவ்விதம் ஆரம்பமாகிறது ? சாதாரணமாப் காலையில் ஜெபத்துடன் நாளை ஆரம்பிப்பதில்லை. இரவில் ஜெபத்துடன் நாள் முடிவடைதில்லை. ஆனால். இவ்விதம்தான் (ஜெபத்துடன்) நம் பெற்றோரும் இப்போதைய பாட்டியம்மா தாத்தாமார் ஒவ்வொரு ஒரு நாளை துவக்கமும் முடிக்கவும் செய்தார்கள். இப்போதுள்ள நமக்கோ நாள் **அகில உலக செய்திகளை கேட்பதுடன்** ஆரம்பமாகிறது. அப்படியே இரவும் அதே **அகில உலக செய்திகளை கேட்பதுடன்** முடிகிறது. நாம் மற்றொருவருடைய பாவங்களையும் சீர்கேடுகளையும் செய்திகள் மூலமாக கவனமாய் பார்க்கிறோம். நம் பெற்றோர் சுய சுத்திகரிப்பிற்கும் பாவ பரிகரிபிற்கும் உபயோகப்படுத்தின அறிய நேரங்களைதான் நாம் சமூக கண்டனத்திற்கு செலவாக்குகிறறோம்.

இயேசு **பாவத்திற்கு** எதிராய் செயல்பட்டார், ஆனால் **பாவம் செய்யும் பாவிகளை** நேசித்தார். நாமே **பாவியை போக்காடாக** பண்ணக்கற்றுக்கொண்டு **பாவத்தை வைத்துக்கொள்கிறோம்**. இது **நம்மை தீமையினின்று இரட்சிக்கவில்லை என்பதை அறிய வேண்டும்.**

- ☐ அடுத்ததாக வேதாகமத்தில் பாவத்திலிருந்து இரட்சிகப்படுவதைப்பற்றி அறியத்தரும் **இரண்டாம்** கட்டத்திற்கு செல்லும்போது **மனிதன்** தன்னுடைய **சொந்த பிரயாசங்களினால்** இரட்சித்துக்கொள்ள முயற்சி செய்வதைக் காண்கிறோம். அவன் சொல்லுவான் இனிமேல் நாங்கள் எங்களுடைய வம்ச பாரம்பரிய குணங்களுக்காக எங்கள் பிதாக்களை குறைகூற மாட்டோம். எங்கள் சுற்றுப்புறங்களையும் குறைகூற மாட்டோம். இதற்கான பொறுப்பை நாங்களே ஏற்றுக்கொள்வோம். ஏசே. 18:2ல் **பிதாக்கள் திராட்சைக்காய்களை தின்றார்கள்.** பிள்ளைகளின் **பற்கள் கூசிப்போயின** என்னும் பலமொழி கூறப்படுகிறது. இது பிதாக்களின் பாவங்களுக்காக **பிள்ளைகள் பாடனுபவிக்கிறார்கள்** என்பதை மூதுரையாக சொல்வதாகும்.

நம்முடைய காலத்திலும் இந்த கருத்து உள்ளது. அது **விதிப்பயன்** என்ற தத்துவத்தில் ஓராளவு வெளிப்படுத்துகிறது. நம் மீது எந்த சக்திகளும் அதிகாரங்களும் கிரியை செய்தாலும் ஏதாவது ஒரு சூழ்நிலையில் நாம் ஒவ்வொருவரும் இதோ நான் இதற்கு பொறுப்புடையவன் நான் பாவம் செய்திருப்பேனேயாகில் அதன் விளைவுகளை **நான் ஏற்றுக்கொள்கிறேன்** என்று தைரியமாக நின்று சொல்லவேண்டியதாயிருக்கும். இது மிகவும் தைரியமான பேச்சாக தோன்றினாலும் நிச்சயமாக ஒருவர் உண்மையான நிலையை காட்டும் மேலான வழியாய் இருந்தாலும் நம் **தீமை புரிபவர்** என்று அறிக்கையிட்டு அதனால் **தீமையினின்றி நம்மையே விடுவித்துக்கொள்வோம்.** என்று நினைத்தால் **அது நடக்கக்கூடாத காரியம்.**

வெறும் **நன்னடத்தை மட்டும் போதாது** நன்னடத்தை நல்லதுதான்., ஆனால் எபிரேய தீர்க்கதரிசிகள் நீதி நெறிமுறைகளை சிறப்புற்றிருந்த போதிலும் இரட்சிக்கப்படுவதின் முழு இரகசியத்தை **அறியாதிருந்தவர்கள்.** ஆகையால் வேதாகமத்தை நீதி நெறிமுறைகளுக்கும் மேலான எண்ணத்தை உடையாவர்களாய் இருந்தனர்

- ☐ **மூன்றாவது** கட்டத்தில் நாம் பார்ப்பது **பாவமில்லாத** ஒருவர் பாவமுள்ளவர்களுக்காக கிரியை புரிவது ஏசாய 53ம் அதிகாரத்தில **பிரருடைய மீறுதலுக்காக** காயப்பட்ட ஒருவரைப்பற்றி வாசிக்கிறோம்.

இது இயேசு கிறிஸ்துவின் **பிறப்பு ! ஜீவியம் ! போதனை ! மரணம் !, உயிர்தெழுதலினால்** நிறைவேறியது. அதே **ஏசாய தீர்க்கதரிசிதான்** நமக்கு **ஒரு பாலகன் பிறந்தார்.** நமக்கு **ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்** என்று கூறினார். இது வல்லமையானதும் இரட்சிப்பை பற்றி விளங்கிக்கொள்வதில் உயர்ந்த கட்டமாயிருந்தாலும் **தீமையினின்றி இரட்சிக்கப்படுவதை** பற்றி வேதாகமத்தின் விவரனையில் இன்னுமொரு கட்டத்திற்கு செல்லவேண்டும். ஆகவே **நாலாம்** கட்டத்திற்கு செல்வோம்.

பசும் புல் வெளி என்னும் ஒரு நாடகத்தில் தேவன் **காபிரியேல் தூதனிடம்** புலம்புவதை பார்க்கிறோம் தேவன் சொல்லுகிறார். இவர்களை **இரட்சிப்பதற்கு** இன்னும் **நான் என்னதான் செய்யமுடியும் ?** ஏனெனில் நான் ஒரு **வெள்ளத்தை** அனுப்பியிருக்கிறேன். **கொள்ளை** நோய்களை அனுப்பியிருக்கிறேன், **தீர்க்கதரிசிகளை** அனுப்பியிருக்கிறேன். ஆனபோதிலும் இவர்கள் தொடர்ந்து **பாவம் செய்கிறார்கள்.** இதற்கு மேலும் **இவர்களை இரட்சிக்க நான் என்ன செய்ய கூடும் ?** பிறகு **ஓசியா** தீர்க்கதரிசி மேடையில் பிரசங்கிக்கிறான் வேதாகமம் படித்தவர்கள் ஒவ்வொருவருக்கும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசி **ஓசியாவை** தெரிந்திருக்கும். அவனுடைய **மனைவி** அவனுக்கு **உண்மையாயில்லாதிருந்தபோது** அவன் இந்த முடியவுக்கு வந்தான் **தன்னாட்சியின்படி** நடந்துதான் மனைவியை **நல்வழிக்கு கொண்டுவர** அவன் **பாடனுபவித்தது** போல **தேவனும்** தவறான வழியில் செல்லும் **தம் பிள்ளைகளை** திருப்பிக்கொண்டு வருதவதற்கு **பாடு அனுபவிக்கிறார்** என்ற முடிவுதான். இது நடந்த பிறகு (நாடகத்தில்) தேவன் **பரலோகத்திலிருந்து பூமியை நோக்கி பார்க்கிறார்.** அங்கே **அவருடைய குமாரன்** ஒரு **சிலுவையை சுமந்துகொண்டு மலைமேல்** ஏறுவதை காண்கிறார்.

இதுவே நமது நாடகத்தில் **4வது கட்டம்.** கிறிஸ்துமஸ் நாட்களில் ஆரம்பிக்கும் கதைதான் இது. இந்த கதை நம் ஆண்டவரின் **பிராசித்தத்திற்கும்** உயிர்தெழுந்த திருநாள் Easter **வரைக்கும்** நீண்டு முடிகிறது. இதோ **தேவன் மகத்துவமானவரும்** பெரியவரும் **உயர்ந்தரும்** பரிசுத்தமானவருமான தேவன், ஆனால் அவர் **தூரமாய் விலகி தனிமையான மேன்மையில்** உட்கார்ந்திருக்கவில்லை. அவர் வருகிறார். இவ்வுலகத்தை (அன்பினால்) **கைப்பற்ற வருகிறார்.** நம் மத்தியில் **நடமாடக்கூடிய ஒருவருடைய உருவத்தில்** நம்முடன் வாழ்ந்து **வருகிறார்**

நூற்றாண்டுகளாய் ஒலித்துக்கொண்டிருக்கும் **உவமைகளுடன்** மிக்க அழகாக நமக்கு போதிக்கக்கூடியவராய் வரவிருக்கிறார். கிறிஸ்மஸ் **தேவன் நம்மோடிருக்கிறார். இம்மானுவேல்** இதைத்தான் **கிறிஸ்துமஸ் அன்று** கொண்டாட கூடுகிறோம். **நமக்கு தேவையானது** இதுதான் அல்லவா .

1) **போக்காடு** முறை தீமையின்று **நம்மை இரட்சிக்காது.**

2) **வெறும் நீதி** நெறிமுறையும் **நல்லொழுக்கமும் நம்மை இரட்சிக்காது.**

3. பலமுள்ளோர் பலவீனரைத் தாங்குவது கூட **பற்றாததுதான்.**

4. நம்மோடிருக்க வந்த தேவன் ஒரவரே தீமையினின்று இரட்சிக்கும்படி வழியாகிறார்.

உங்களுக்கு தெரியுமா தவிக்கப்பட்டு நரகத்துக்கு பாத்திரமான பாவிகளை **பரலோகத்தின்சுதந்திர வாளியாய்** மாற்றகிறபடியால்தான **அவர் அதிசயமானவர்**

## ONLINE BANKING (NEFT)

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

**DECEMBER 2022**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.